**வாக்குமூலம்**

**குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–II, கொடைக்கானல்.**

**CC.எண். 04/2024**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **: அனில் குமார்** | தொழில் | பில்டிங் காண்ட்ராக்டர் |
| தகப்பனார் பெயர் | : டேவின் இருளப்பன் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : கொடைக்கானல் | பாலினம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 61/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 03.08.2026 |

(1969ம் ஆண்டின் 54வது விதியின் 9 வது பிரிவு ஏற்பாட்டின் படி இளநிலை உதவியாளர் திரு. வீரகணேஷ் என்பவரால் **P.W.1** செய்விக்கப்பட்டு, அவரின் வாக்குமூலம் பதிவு சத்தியப்பிரமாணம் செய்யப்படுகிறது)

**(1 முதல் 3 வரையான எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள், 4காம் எதிரி ஒட்ட சந்திரம் E sewa kendra Video Conference மூலம் பென்னிசன் என்பவர் ஆஜரானர் )**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கொடைக்கானலில் குடியிருந்து பில்டிங் காண்ட்ராக்டர் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரரை தெரியும், இவ்வழக்கின் ஆஜரில் உள்ள நான்கு எதிரிகளையும் தெரியும், 1ம் எதிரி தேவதாஸ் எங்களுடைய திருசபையில் போதகராக இருந்து வந்தார் கடந்த 2015ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டார், சுமார் 40 வருடங்களாக திருசபை பணியாற்றி வந்தார், மற்ற திருசபையில் இருக்கும் ஓய்வு பெற்ற பாஸ்டர்களுக்காக தங்கும் விடுதியாக Afton Cottage பயன்படுத்தப்பட்டது. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள Afton Cottage ஆனது IELC Trustக்கு சொந்தமான இடமாகும். 1 ஆம் எதிரி மற்றும் அவரது குடும்பத்தார் திருசபையில் ஓய்வு பெற்ற பின்பு , தொடர்ந்து Afton Cottage உள்ள மூன்று

ரூம்களில் அத்துமீறி சம்பளம் பாக்கி காரணமாக மற்ற எதிரிகளுடன் இருந்து வந்தார். கடந்த 2020ம் வருடம் 1ஆம் எதிரி மற்றும் அவரது குடும்பத்தாரை காலிசெய்ய சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் காலி செய்ய சொல்லி கோரியும் , ஆனால் காலி செய்யாமல் இருந்து வந்தார். கடந்த 09.01.2023ம் வருடம் சுமார் காலை 11.00 மணியளவில் நானும், மரியா ஆரோக்கிய தாஸ், அமர், ஸ்டெல்லா, இருதயராஜ், வெங்கடேஷ் ஆகியோர்கள் கொடைக்கானல் லாக் எண்ட் காம்போண்ட் உள்ள Afton Cottage இல் இருக்கும் ரூம்கள் சரியாக இருக்கிறதா என்று பார்வையிட மேற்கண்ட எல்லா நபர்களும் சென்றோம். நான் அப்போது 1 ஆம் எதிரி தேவதாஸ் இங்கிருந்து எல்லா நபர்களும் ஓடிவிடுங்கள் இல்லை யென்றால் உங்களை நான் வெட்டிவிடுவேன் என்று அருவாளை காம்பித்து மிரட்டினார். பின்னர் அவர் குடும்பத்தார், தகாத வார்த்தைகள் சொல்லி எங்களை திட்டி எங்களை அங்கிருந்து கிளம்பிவிடுங்கள் என்று மிரட்டினார்கள். அதன் பின்னர் பிரச்சனை வேண்டாம் என்று நாங்கள் வந்துவிட்டோம். இதற்கு மேல் நாங்கள் அங்கிருந்ததால் எதாவது அசம்பாவிதம் நடந்து விடும் என்று பயந்து அங்கிருந்து வந்துவிட்டோம். மேற்படி சம்பவத்தை எங்களுடை தலைமை அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தோம். அதன்பின்பு கடந்த 11.01.2023ம் தேதி மறுபடியும் மாலை 04.00 மணியளவில் திருசபையில் உள்ள குடியிருப்பு கட்டிடத்தை பார்வையிட சொன்றோம். அங்கிருந்த கதவுகள் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவை உடைக்கப்பட்டு இருந்தது. பின்னர் எங்களுடைய கமிட்டி ஆலோசனை செய்து 12.01.2023ம் தேதி கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார்தாரர் புகார் கொடுத்தார். மேற்கண்ட சேத மதிப்பு சுமார் ரூ.30,000/- ஆயிரம் இருக்கும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் சார்ச்சில் எந்த வருடம் முதல் பொருப்பாளராக இருந்து வருகிறேன் என்றால் கடந்த 2020ம் ஆண்டு முதல் இருந்து வருகிறேன். இந்த வழக்கில் 1ஆம் எதிரியான தேவராஜ் என்பவர் கொடைக்கானல் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிர்வாகத்திற்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு எண். OS.No.18/2023 என்றால் சரிதான். மேற்கண்ட Afton Cottage ல் உள்ள மூன்று அறைகளில் எதிரியானவர்கள் தங்கியிருந்தார்கள் என்று உரிமையியல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது நாங்கள் 09.01.2023ம்

அன்று அங்கு சென்றது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1ஆம் எதிரியான தேவதாஸ் வேலை பார்த்ததற்கு கான ஓய்வு ஊதிய தொகை தரவேண்டும் என்பது தொடர்பாகதான் எங்கள் மீது வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான். தற்போது ஆறு மாதங்களுக்கு முன்னாடியே மேற்கண்ட தொகையை நாங்கள் கொடுத்துவிட்டோம் என்றால் இல்லை 2023ம் வருடம் நாங்கள் கொடுத்துவிட்டோம். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் நாங்கள் கொடுத்தோம் என்றால் சரிதான். இந்த பணத்தை பெற்ற பின்பு தேவதாஸ் மற்றும் அவரது குடும்பத்தார்கள் மேற்கண்ட குடியிருப்பை விட்டு வெளியே சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் புகாரரை யார் எழுதினார்கள் என்றால் திருசபையை சார்ந்த தலைவர் மரியா ஆரோக்கியதாஸ் தான் எழுதினார். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் பில்டிங் காண்டராக்டர் வேலை செய்து வருகிறேன். மேற்கண்ட புகாரரை எழுதும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். மேற்கண்ட புகாரில் 11.01.2023ம் அன்று இந்த வழக்கில் சொல்லப்படும் நான்கு எதிரிகள் இல்லாத சமயத்தில், எங்களது இடத்தினை சென்று பார்வையிட்டபோது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இரண்டு நாட்களுக்கு முன்பு அதாவது 09.01.2023ம் தேதி 1ம் எதிரி தேவதாஸ் அவர்கள் என்மீதும் , ஸ்டெல்லா, இருதயராஜ், வெங்கடேஷ் டோனி, அமர்நாந் , வில்சன் பாஸ்டர் ஆகியோர் மீது கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு நானும், மற்ற நபர்களும் சென்றோமா என்றால் சரிதான். நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள தேதியான 09.01.2023ம் தேதி கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்பட்டு இருந்ததா என்றால் புகார் கொடுத்துள்ளோம். அந்த போலீசார் விசாரணையில் எதிரி கொடுத்த புகாரில் , என்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றாலும் என்மீது போலீசார் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 09.01.2023ம் தேதி நான் நடந்த சம்பத்திற்கு தங்கள் மீது பதியப்பட்ட வழக்கில் இருந்து தங்களை காப்பாற்றி கொள்ளவதற்கு தங்களுடைய திருசபை சேர்ந்த நபர்களுடன் சேர்ந்து நடக்காத சம்பவத்திற்கு நடந்தது போல் பொய்யான காரணங்களை கூறி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் சேத மதிப்பு பற்றி சொல்லிய பொருட்களை , எதிரிகள் சேதபடுத்தியதை நான் நேரடியாக பார்தேனா என்றால் நானும், மரியனா ஆரோக்கிய தாஸ் அங்கு சென்று மேற்கண்ட நான்கு எதிரிகளும் உடைப்பதை நாங்கள் தடுத்தோம். எதிரிகள் மேற்கண்ட பொருட்களை

உடைத்ததா சொல்லப்படும் எந்த நேரம் மற்றும் தேதி என்றால் 11.01.2023ம் தேதி சுமார் மதியம் 03.00 மணிஅளவில் இருக்கும். நான் உடைத்ததை தடுத்த தாக சொல்லபடும் அன்றைய தினமே புகார் கொடுத்தேனா என்றால் மறுநாள் 12.01.2023 ம் தேதி புகார் கொடுத்தோம். எங்களுடைய புகாரிலே எதிரிகள் யாரும் இல்லாத நேரத்தில் சென்று பார்த்தபோது தான் உடைக்கப்பட்டியிருந்ததாக குறிப்பிட்டுள்ளது தற்போது நீங்கள் எதிரிகள் உடைக்கும் போது தடுத்தாக சாட்சியம் அளிப்பது பொய் என்றால் சரியல்ல. புகாரில் உடைத்தாக சொல்லப்பட்ட பொருட்களை எதிரியானவர் உடைத்ததை நாங்கள் நேரடியாக பார்க்கவில்லை அன்றைய தினத்தில் Afton Cottage ன் காம்போண்ட் சுவரை அவர்கள் எதிரிகள் நான்கு நபர்களும் கடப்பாறை உடைத்து கொண்டிருந்தார்கள் , அதை நானும், மரியான் ஆரோக்கியதாஸ் சென்று தடுத்தோம். அதை பற்றி நாங்கள் புகாரில் குறிப்பிடவில்லை. எங்களுடைய சர்ச்க்கும் கொடைக்கானல் காவல் நிலையத்திற்கும், அரைகிலோ மீட்டார் தூரம் இருக்கும் என்றால் சரிதான். தாங்கள் சொல்லுவது போல் சம்பவம் நடந்திருந்தால் அன்றைய தேதியில் நாங்கள் புகார் கொடுத்திருப்போம், ஆனால் நான் சம்பவம் எதுவும் நடைப்பெறாததால் மேல் அதிகாரி சொல்லியதன் பேரில் மறுநாள் தான் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் எங்களுடைய Administratorக்கு தகவல் சொல்லி , அவர் சொன்ன பின்பு தான் அடுத்த நாள் தான் நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம்.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

N.Thisho Nanth

Digitally signed by N.Thisho Nanth
Date: 2026.08.03 18:01:56 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்எண். 2,
கொடைக்கானல்.